காவியம்

ஆசிரியர்: சுரதா.

(கவிதை வார இதழ்)

சுவடி 1: ஏடு 7 | சென்னை: திருவள்ளுவராண்டு, 1987, ஐப்பசி 18 4—11—55 | விலை அணு 1

ஏழைகளைச் சிரிக்க வைத்தவன்



வானகத்துச் செங்கதிரைப் போல, மூக்கு
வாங்கிவிட்டுக் கொண்டுவரும் காற்று போல,
ஆனைமுதல், ஆழ்கடலின் பொருளனைத்தும்,
அகிலத்தில் அனைவர்க்கும் சொந்த மாகும்.
ஏனிந்த பேதங்கள் பிறகு? ஏழை
இனம்ஒன்று இருப்பானேன்? மிரண்டு பார்க்கும்
மானழகு விழிப்பெண்டி ரோடு கொஞ்சி
மாடியிலே வாழ்வானேன், மற்ருேர் கூட்டம்?

காரல்மார்க்ஸ் இவ்வாறு எண்ண மிட்டான்;
கண்டித்தான்; பொருளறிவு நூலைத் தந்தான்.
பாரனைத்தும் மேன்மைபெற, மேலே ஏறப்
படிபோன்று இருந்துவரும் அந்த நூலின்
சாரத்தை இம்மனிதன் உணர்ந்து, மக்கள்
சரித்திரத்தைத் திருப்புதற்குத் தீர்மா னித்து,
வாரத்தால், மாதத்தால், முதிர்ந்த, சொந்த
வாழ்நாளை நாட்டுக்கே அர்ப்ப ணித்தான்!

கடவுளர்கள், பூசுரர்கள், ஆதாம், ஏவாள்,
கலிகால தெய்வங்கள்; அறிவு தன்னைக்
குடைசாய்க்கும் மதமனிதர், எவரும் இந்தக்
குவலயத்தில் இதுவரையில் செய்தி டாத,
வெடிவானத் திடிப்புரட்சி செய்து, எழ்மை
வேதனையைப் போக்கியவன் இந்த குள்ளன்!
தடையாவும், தூள்! தூள்! தூள்!!! சாரின் ஆட்சி
தவிடுபொடி; இவனுலே, ருசிய நாட்டில்!

இருட்டாக இருந்திட்ட ருசிய நாட்டுக்
கிவன்ஒருவன் இல்லாது போயி யிருந்தால்;
திருட்டுக்கள்; தீச்செயல்கள்; பசியி னுலே;
தினந்தோறும் இறப்பவரின் கணக்கு; செல்வம்
பெருக்கிவரும் பணக்காரன், ஏழை, என்னும்
பேதங்கள் இருந்தபடி இருந்தி ருக்கும்!
எரிக்கின்ற நெருப்பாக இருந்து வந்த
இவன்தான்காண் லெனின்என்னும் புரட்சி வீரன்!

சாவா மருந்து



துடிக்கு ளடங்கியொரு பிடிக்கு ளடக்குஞ் சின்ன
இடையினுள்! காமத்
துட்ட னரண்மனைக்குக் கட்டுங் கதலி வாழைத்
தொடையினுள்!
அடுக்கு வன்னச்சேலை யெடுத்து நெறி பிடித்த
உடையினுள்! மட
அன்ன நடையிலொரு சின்ன நடை பயிலும்
நடையினுள்!

—திருக்குற்ருலக் குறவஞ்சி

★ கடவுளும் செய்யாத காரியத்தைச் செய்தவன் ★

இதயம்

சென்னை 4—11—55 வெள்ளி

கேரளமே கேள்!

இன்னும் ஏன் புறம்போக்குப் பேச்சு ?

பீர்மேடு, நெய்யாற்றங் கரையி னோடு,
பிரச்சினையி லேயிருக்கும் சித்தூர், நல்ல
நீர்பாயும் தேவிகுளம்; இந்த நான்கும்
நிச்சயமாய்த் தமிழர்க்கே உரிமை யாகும்.
ஆர்வந்து கேட்டாலும் விடையளிப்போம்,
ஆதாரம் தந்திடுவோம் மேன ஞரே!
ஓர்நாளும் விடமாட்டோம்; வேண்டு மென்றே
உரத்தகுரல், புறம்போக்குப் பேச்சு வேண்டாம்?

யாருக்குச் சொந்தம் ?

பொருள்நிர்வா கத்துறையில் பார்த்திட் டாலும்
புகழ்பெற்ற சென்னைமா நிலத்தி னுக்கே
தரப்படவேண் டும்இந்தத் தாலுக் காக்கள்.
தமிழ்நாட்டில் இயங்கிவரும் இயக்கம் யாவும்,
இருநூறு காரணங்கள் எடுத்து ரைத்தும்
எங்களுக்குத் தான்இவைகள் சேர வேண்டும்
தரமாட்டோம் எனக்கூறும் கேர ளீயர்
சண்டித்த னஞ்செய்தால் என்ன அர்த்தம்?

வேண்டுமா ஆயிரம் ஆதாரம் ?

தேவிகுளம், பீர்மேடு, வட்டந் தன்னில்
செந்தமிழர் தான்அதிகம்; முண்டு டுத்தும்
கோவிந்த மேனேனின் கூட்டம் அங்கே
குறைவாகத் தான்உண்டு! மேலும் அங்கே,
தூவும் விதை நிலத்தோடு ஏலக் காயின்
தோட்டமெலாம் தமிழர்க்கே சொந்தம், வீணே,
கூவுவதில் பதிந்துள்ள நோக்கம் என்ன?
கொத்திக்கொண் டேப்பமிடும் நினைப்பு தானே?

இன்றே செய்க! இன்னே செய்க!

திரு-கொச்சி விவகாரந் தன்னைப் பேசி;
தினந்தன்னைக் கழிக்காமல், இன்றே, இன்னே,
விரைவினிலே தக்கபரி காரந் தன்னை,
வெடுக்கென்று செய்தாக வேண்டும். இன்றேல்
எரிகின்ற நெருப்பின்மேல் எண்ணெய் ஊற்ற
எந்நேரம் ஆகும்? இதை, ஆட்சி யாளர்,
சரிக்கட்டு வார்களென நம்பு கின்றோம்.
தமிழர்க்கே வெற்றிஎன எண்ணு கின்றோம்!

திருமணம் ஒரு தித்திப்புச் சேர்க்கை!

மதிக்கின்ற செங்கதிரில் வெடித்து வந்த,
வயதான உலகத்தில்! திரும ணந்தான்
விதையாகும் உயிர்க்கூட்டம் முளைப்ப தற்கு!
மேலுமிது, தித்திப்புச் சேர்க்கை யாகும்.
ஒதுக்காதீர் இல்வாழ்வை, இல்வாழ் வின்றேல்,
உற்சாகம் சோர்ந்துவிடும், விரலில் உள்ள,
சதைமீது வெள்ளைநகம் இல்லா விட்டால்,
தரைமீது எவன்நொண்டி ஆக மாட்டான்?

சொல் விளக்கம்

குதிரை

தார்வேந்தன் கொக்கரித்தான், "வடக்கு நாட்டார்,
தலையெடுத்து வருக" என ஆணை இட்டான்.
போர்வீரர், குதிரைகளின் மீது ஏறிப்
புறப்பட்டார் விரைவாக. குதிரைக் கூட்டம்,
ஊர் முழுதும் மண் புழுதி பறக்க விட்டு
ஓடிற்று வீதியிலே! அதனை, அம்புக்
கூர்விழியால் பார்த்தபடி, சிலைபோல் நின்றாள்,
குளத்திற்குத் தாமரைப்போல் இருந்த செல்லம்.

அசையாது நின்றவளின் ஆடை தன்னை,
அந்திஇளங் காற்றுவந்து இழுக்க; எச்சில்
வசிக்கின்ற வாயிதழில் முத்தம் வைக்கும்
மணவாள னேஎன்று திரும்பிப் பார்த்தாள்.
பசியைப்போல் உருவற்ற தென்றல் காற்றின்,
பரிகாசச் செய்கைஎன அறிந்து கொண்டு,
அசைக்காத அங்கத்தை அசைத்து; முல்லை
அரும்புதனைக் கிள்ளிவர, இடம்பெயர்ந்தாள்.

கொல்லையிலே வாய்மூடிக் கொண்டி ருந்த
கொடிமுல்லை அரும்புதனைப் பறித்துக் கொண்டே,
"வெல்லாது வருவாரோ சேர நாட்டு
வில்வீரர்" எனும்பாட்டைப் பாட லுற்றாள்.
செல்லப்பன் அப்பாட்டு தன்னைக் கேட்டுச்
சிலம்பணிந்த சிங்காரி அருகில் வந்து,
அல்லிப்பூ வே! முத்தம் அளிக்கும் பூவே!
ஆட்டத்து டன்பாடு என்று ரைத்தான்.

"பாடுவது இருக்கட்டும், போர்க்குச் சென்ற
படையினரைப் பார்த்தீரா அத்தான்" என்றாள்;
"கோடைநில வேபார்த்தேன்" என்றான். மங்கை;
"குதிரைகளைப் பார்த்தீரா" என்று கேட்டாள்.
"கூடையின்வாய் தனைமூடும் மலர்எ டுத்துக்
கொண்டையின்வாய் தனைமூடும் பருவப் பெண்ணே!
ஓடியஅக் குதிரையையும் பார்த்தேன்; உந்தன்
உடலழகு முழுவதையும் பார்த்தேன்" என்றான்.

புதுக்காதற் செய்கையினால், கண்சி வக்கும்
பொன்பதுமை; "அம்மிருகந் தன்னை மக்கள்;
எதற்காகக் குதிரைஎன அழைத்தல் வேண்டும்?
எனக்கேட்க; மொழிநுட்பம் அறிந்த அன்னோன்,
குதித்தோடும் காரணத்தால், நமது முன்னோர்,
குதிரைஎன அழைத்திட்டார் அதனை" என்றான்!
"புதுஅறிவு நான்பெற்றேன்" என்றாள். "எங்கே;
புதுமுத்தம் அதற்காக" என்றான். தந்தாள்!

அறிஞனாவதற்கு?

முற்றி வரும் உலகத்தில் உள்ள மக்கள்,
முன்னேற்றம், பெருங்கீர்த்தி; பெறுதல் வேண்டின்,
வற்றாத பெருமுயற்சி தினமும் செய்து
வந்தால்தான், அந்தநிலை அடைதல் கூடும்.
அற்பமுயற் சியினாலே யாரும், இந்த
அகிலத்தில், பேரறிஞன் ஆனதுண்டா?
கற்பூரத் தின்நெருப்பி னாலே, ஈரக்
கல்சூளை ஒருநாளும் வெந்தி டாது!

ஓர் இரவு

இலைஉதிர்ந்த மரங்கட்கு, இளமை தன்னை
ஏற்படுத்தும் இளவேனிற் பருவ காலம்;
தலைதூக்கும் செங்கதிரின் வட்டங் கண்டு;
தாமரைப்பூ வாய்திறக்கும் காலை நேரம்;
சிலைபோன்ற அழகுமனை யாளை நோக்கித்
திருவள்ளு வன்'அன்பே' என்றழைத்தான்.
கலைவளர்க்கும் கணவனுக்கு ஏற்ற, நீலக்
கண்ணழகி, ஏன்?என்று எதிரே வந்தாள்.
'எழுத்தாணி தனைஎடுத்து வருக' என்று
ஏடுதனைப் புரட்டிக்கொண் டிருந்தான். மங்கை,
விழிமூடித் திறப்பதற்குள் கொண்டு வந்தாள்.
விஞ்ஞான எண்ணத்தோன், அதனை வாங்கி,
உழவுஎனும் அதிகாரம் தொடங்க லுற்றான்,
ஒல்லிஇடை யாள்குடும்பக் கடமை தன்னைப்
பழுதின்றிச் செய்து,அதை முடிக்க, அந்தப்
பாட்டறிஞன், எட்டுகுறள் தனைமு டித்தான்.
செழிப்பாக விளைந்தாலும், உரிய நாளில்
சென்றுஅதைப் பாராது, வீணே காலம்
கழிப்போர்க்கு, எவ்வுவமை பொருந்தும்? என்ற
கருத்தினிலே தன்நினைவைச் செலவ ழித்தான்.
எழுந்தகதிர், மேற்கினிலே விழுந்து; பின்னர்
இருள்வந்து; அதைப்போக்கச் சுடரை ஏற்றும்,
பொழுதுவரை, சிந்தித்துப் பார்த்துங்கூட
புதுஉவமை அவனுக்கு உதிக்க வில்லை!
பனைஓலைச் சுவடிகளை எடுத்து வைத்துப்
படுக்கைக்குச் சென்றிட்டான் கவலை யோடு.
தினந்தோறும் சிந்திக்கும் வழக்க முள்ளோன்
தேன்மனைவி அருகினிலே நெருங்கி; "எந்தன்
மனக்கவலை தீர்க்கின்ற மருந்தே! இன்ப
மஞ்சத்தின் வாய்விருந்தே!" என்று கொஞ்சும்
தனிப்பேச்சை ஆரம்பம் செய்தான், அந்தச்
சங்கிதக் குயில்மங்கை பிணங்கி நின்றாள்.
அகிலத்திலே சிறந்த அறிவு பெற்றோன்,
ஆசைமனை யாள்மீது கோபங் கொண்டு,
சுகிக்காமல் பாய்விட்டு விலகிக் கொண்டான்.
சுகமின்றி அன்றிரவு—கத்தி யாலே
வகுத்திட்ட மாம்பிஞ்சுப் பிளவு போல,
வள்ளுவனும், மனையாளும் தனிமை ஆனார்.
பகல்கண்ட பாலைவனம் போல்கொ தித்தான்
பனிஇரவுக் காதலங்குத் தோற்ற தாலே!
"நினைவுகளின் அசைவுகளோ, துன்பம்! கல்வி
நினைவுடையோர் சிந்தனையோ, மிகவும் துன்பம்!
கனவுகளோ, நித்திரைஏற் படுத்தும் துன்பம்!
காமத்துப் பால்வெற்றி பெற்றால், வாழ்வு
பனிமீது பனியேதான்! காதற் கட்டம்,
படுதோல்வி யுறும்போது; தீயில், எண்ணெய்
நனைத்ததொரு பெருவிறகை வைத்தல் போல்தான்;
நல்லிளமைப் பருவத்தை உடையோன் தேகம்!—
எண்ணத்தை இவ்வாறு அலைய விட்டு,
இப்படியும் அப்படியும் புரண்டான். பின்னர்,
வண்ணமலர் முகத்தாளை எழுப்பி, "கண்ணே!
வந்ததடி புதுஉவமை எனக்கு" என்றான்.
கண்ணழகி, "அவ்வுவமை யாது? என்று
கவியரசன் தனைக்கேட்க, உடனே அன்னோன்,
"பெண்ணமுதே! இதுவரையில் துன்பம் பெற்றேன்,
பெற்றாலும் நான் வெற்றி பெற்றேன்" என்றான்.
"உன்பிணக்கை நான்தீர்த்து வைத்திருந்தால்,
ஒட்டுமாம் பழக்கன்னம் சுவைத் திருப்பேன்.
என்னாலே 'ஓர்இரவு' பதரைப் போன்று,
எப்பயனும் இல்லாது போனாற் போல
தன்னுடைய நிலந்தன்னைச் சுற்றிப் பார்க்கும்
தன்மையிலார்க் கிவ்வுவமை பொருந்தும்" என்றான்.
பொன்னழகுப் பூமுகத்தாள், ஆம்! ஆம்!-மிக்கப்
பொருத்தமிந்தப் புதுவுவமை என்று ரைத்தாள்.
"கொம்புநில வே!"என்றான் "குன்றே!" என்றான்.
கோதையவள்: "நேற்றிரவு இரண்டு பேரும்,
கும்பிடுங்கை போல்சேர்ந்து, இருந்தி ருந்தால்,
குறளுக்கு இவ்வுவமை வருமா?" என்றாள்.
"வம்பிழுத்து, காமத்தி தன்னில் தள்ளி
வருத்தாதே இனிமேலே" என்றான். பன்னீர்ச்
செம்பைப்போ லேசாய்ந்தாள், கவிஞன் தோளில்;
சிலிர்த்திட்டான், செங்கரும்பைத் தழுவிக் கொண்டான்!

பிணக்கில் பிறந்த புது உவமை

இராமனை எரிப்போம்

வைக்கோலால் இராவணன்போல் செய்து, தீயை
வைக்கின்ற வடநாடே! மதிப்பு அற்ற
தக்கைஎவன்? மரங்களின்பின் ஒளிந்தி ருந்து,
சங்காரம் செய்தவன்யார்? நாணப் பட்டு,
முக்காடு போடாத மனைவி தன்னை,
முந்நூறு நாட்கள்வரை விட்டு வைத்தப்
பொக்கைஎவன்? பேடிஎவன்? ராமன் தானே?
புரிநூல்ரா மனையன்றோ கொளுத்தல் வேண்டும்?

மஞ்சத்தில் மனைவியொடு தூங்கிப் பார்த்தும்
மனைவியர்கள் மலடிகள்போல் இருக்க, பின்னர்
பஞ்சாங்க ரிஷிக்கூட்டம் உதவி செய்ய,
பாரினிலே பிறந்தானே உங்கள் ராமன்,
வஞ்சத்தில் நரிமிருகம் அன்னோன்! வீர,
வாளெடுத்த ராவணனோ, கள்ள மில்லான்.
அஞ்சுகின்ற கோழைக்கும் கோழை யான
ஆரியரா, மனையன்றோ கொளுத்தல் வேண்டும்?

கொத்தைப்போல், தேங்காயின் குலைபோல், சேர்ந்து
கூட்டுறவாய், சாதிமதம் ஏது மின்றி,
எத்தனையோ நூற்றாண்டு வாழ்ந்த எங்கள்,
இனத்தாரின் ஒற்றுமையைக் கலைத்த—நேரே
குத்தாத முள்போன்ற ஆரி யத்தின்,
கொடிவழியில் வந்திட்ட ராமன் தன்னைச்,
செத்தையென எரிப்பதற்கு அதிக நேரம்
செல்லாது எங்கட்கு மறந் திடாதீர்?

இசைப்பாடல்-7

நிலமும் காலமும் முதற்பொருள்!

(எடுப்பு)

நிலமும், காலமும் முதற்பொருள்—
குளிர் நீரில் பிறந்த (நில)

(மேல் எடுப்பு)

மலைசார்ந்த குறிஞ்சி; முல்லை—வயல்
மருதம், நெய்தல் என்னும் நால்வகை (நில)

(அமைதி)

புணர்தல், பிரிதல், இருத்தல்—குறித்த
பொழுதினைக் கண்டு இரங்கல்;
உணர்வினைச் சிறிது தடுத்து—நிறுத்தும்
ஊடல் முதலிய உரிப்பொருள் நிகழும் (நில)

மரங்கள், பறவைகள், உணவு—செய்தி
மனிதர்க்கு அறிவிக்கும் பறைகள்;
வரிப்புலி யொடு பல மிருகம்—யாழ்
வகையொடு இன்னும்பல கருப்பொருள் உடைய (நில)

அரங்கேற்றம்!

தவழும் செல்வம்

மழலை மன்னு! என் கண்ணு!
மரகதச் சிலையே! மணிவண்ணு!
உலகமே எனக்கு நீயன்றே!
உயர்ந்தாய் எனக்கேட் பதுஎன்றே?

முழுமதி யாகும் உன்முகமே!
மோகனப் பெட்டகம் உன்அகமே!
கழுவிய உளுந்து உன்பல்லே!
கல்லையும் கரைக்கும் உன்சொல்லே!

சிரிப்பாய் பொக்கை வாய்திறந்து;
சிலைபோல் நிற்பேன் எனைமறந்து;
விரிப்பாய்க் கமலக் கரத்தினையே,
விரைவாய்த் தருவாய் சிரத்தினையே!

—தமிழ் வாணன், தூத்துக்குடி

தீயோர் இட்ட தீ வாளி

ஏவல்செய் தென்நாளும் எத்தராம் ஆரியர்பால்
சாவை அணைக்குமென் தண்டமிழா! ஏனோநீ
தீவாளி யென்றித் திருநாட்டிற் கொண்டாடி
ஏமாந்தாய் சொற்பொருளை யாதென் றறியாதே!
தீயென்றால் தீயாகும் வாளியென்றால்
மாயச் சிலையின்கண் மாட்டியே போர்மறவன்
ஏயுமம்பாம்; அறிக! இன்தமிழர் கொள்கைவிழ
தீயஅம்பு விட்டநாள் தீவாளி என்பாயே!
சூழ்ச்சி விரும்பாயென் தொல்தமிழா! உன்வாழ்வு
வீழ்ச்சியுற அந்நாளில் வீணராம் ஆரியர்தாம்
வாழ்வுபெற மாநரகன் வாழ்விழந்த நாளென்றே
சூழ்ச்சிக் கதைகட்டிச் சொன்னதைநீ ஓர்வாயே!

—இரா. சண்முகம், பண்ணைக்காடு

நரக மோட்சம் ஏது?

முத்தன்ன சிரிப்புடைய மருதம் என்பாள்.
முன்வந்து நின்றபடி, என்உ தட்டைத்
தித்திக்க வைத்துவரும் அத்தான், இந்தத்
திரைஉலகி லேநரக மோட்ச மென்னும்
சத்தத்தின் பொருள்பற்றி எனக்கி ருக்கும்
சந்தேகந் தனைப்போக்க வேண்டும்" என்றாள்.
தித்திக்கும் கொய்யாவே! என்ற ழைத்துச்
சிங்காரி தனை நோக்கித் தெரிவிக் கின்றான்:

"வள்ளுவரின் திருக்குறளும், ஔவைப் பாட்டி
வகுத்துள்ள நீதியும் நாலடியார்-கோவை
உள்ளிட்ட கருத்திற்கே திருந்தாமக்கள்
ஒன்றுமிலா சொர்க்கத்தால், நரகந்தன்னால்,
கள்ளத்தை விடுவார் கொல்! அன்பே அற்பக்
கடைக்குணத்தோர் அவிழ்த்திட்டப்புராணக்குப்பை
எள்ளி நகை யா"டென்றான் ஏந்தல். "அத்தான்
இதயத்தை மாற்றிவிட்டீர்" என்றாள். மங்கை.

காவிரியைப் போன்றவளே! இன்னுங் கேளாய்,
காசினியைச் சிலர்மறந்தார், "சொர்க்கம்வேண்டிப்
பூவிரிந்த புவியின்பம் தேடேல்" என்று
பெரும்பட்டைச் சாத்திடுவோர் பேசுகின்றார்.
கூவுகின்ற கோட்டானு உலக வாழ்வு!
குயில் பாடும் பூஞ்சோலை! பண்டா ரங்கள்,
தாவுதற்கு முடியுங்கொல்! நரக சொர்க்கம்,
தர்ப்பையரின் கற்பனையே அறிக என்றான்.

—அ. சீனிவாசன்,
கும்பகோணம்

உழைப்பும் வாழ்வும்

காலையிளம் பரிதியின் முன் கலப்பை கொண்டு;
கழனிகளில், வெளிப்புறத்தில் உழவர் கூட்டம்!
வேலையினால் சோர் வோடு கூலிக் காரன்;
வெயிலதனில் உழைத்துருகும் நிலைமை பாராய்!

ஆலையிலே உடல் வாட இயந்திரத்தில்
அங்காடிக் கடைகளிலே, அலுவல் உள்ள
சாலையிலே, மாலைவரை வியர்த்துக் கொட்ட
சஞ்சலம் சேர் தொழிலாளர் தொகுதி பாராய்!

கல்வியில்லை; வாழ்வதற்கு வகையுமில்லை
கடும் போர் தான் ஓய்வில்லை;
நல்விதமாய் வாழ்வதற்கு வலிமை யில்லை.
நாள்தோறும் துயரத்தால் நலிகின்றார்கள்!

—பூங்குயில். வல்லம்

எது நாடு?

புழுவாய்த் துடிப்பார்ப்
பசிவெங் தணலாற்
புகலிடங் காணு தழல் வாரும்;
பிணியால் வருந்திப்
பிறராற் பழித்துப்
பிணமாய்த் திரிந்து இரப்பாரும்;
மகிழ்வை யொழிக்கும்
இகழ்வைப் பெருக்கும்
அழிவைப் பழியை விளைவிக்கும்;
விடநேர்ப் பகையும்
அடஞ்செய் மதமுஞ்
"சேரா தியல்வது நாடாகும்,"

—பா. நிலவரசு, நுங்கம்பாக்கம்.

"சுதந்தர அரசாங்கம் சரிதான்"

சுதந்திர அரசாங்கம் சரிதான்!—ஏழை
சொத்தைப் பிடுங்கிட வரிமேலே வரிதான் [சு
இதமான மொழிபேச்சு ஏட்டில்—ஆனால்
என்ன நடப்பது கண்டீரோ நாட்டில்! [சு
ஏற்கென வேநில வரியாம்—சுமை
ஏற்றிடத் தாங்காத உழவர்கள் தலையில்
மேற்கொண்டும் வரிச்சுமை ஏற்றி—அவர்
மேழிச் செல் வம்கோழை பட்டிடா தென்றார் [சு
வரிக்கயிற்றால் ஏழைக் கழுத்தை—மேலும்
வரிந்துகட் டாதீர் தளர்த்துக என்றால்,
சரிக்கட்டி ஆகாது பணந் தான்—என்று
சலிக்காமல் இறுக்கிடும் பணிசெய்யு கின்றார்; [சு
நிலம் விற்று வரிதர வேண்டும்—இந்த
நிலைசிறு நிலமுள்ள ஏழைக ளுக்கே;
விலக்குகள் தருவது வேண்டும்—என்று
வேண்டில் ஏற்காது ஆளுகின் றாரே! [சு
பொன் முட்டை இட்டதோர் வாத்து—வெட்டப்
போனது மோசமாய் ஆனவன் போன்று
இன்புறும் "ஐந்தாண்டு திட்டம்"—என்று
ஏய்ப்பது மக்களை மாய்ப்பது ஆகும்! [சு

—"பரிதிப்புகழோன்"

அதை யார் கண்டார்?

வண்ணமலர்ப் புன்னகையை வாரி வீசும்
வயற்கதிர்கள் வணக்கத்தை வழங்கும் நல்ல
பண்ணிசையும் கவிதைக்குப் பலவும் எண்ணப்
பரிசளிக்கும் எனச்சாலைப் பக்கம் சென்றேன்;
கண்ணெதிரிற் காங்கிரசுக் கார நண்பன்
காணுகிறான். அவனுக்குக் கறுப்பு என்றால்
மண்ணோடு மண்ணாகி மக்கி இன்றே
மாயட்டும் எனஎண்ணும் மாண்பு நெஞ்சம்.
"தீச்சுடு; தேள்கொட்டு; தீமை; எட்டி
திருவிடமாம்!" எனப்பேசும் தியோன் முட்டாள்
பேச்சோடு பிரமாதப் பிதற்றல் செய்யும்
பித்தனிடம் "இசைகேட்கப்போவோம்" என்றேன்
வாய்ச்சவடால் பேர்வழியே! வா! வா! என்றான்
"வருகின்றேன்" எனஅழைத்துச் சென்றான் மந்தி
ரிச்சென்று கத்திற்று கிளையில்; "இந்தா
கேள் இந்த கீதத்தை என்று சொன்னேன்.
கொட்டாவி விட்டபடிச் சென்றோம்
கூரைக் குடிசையிலே ஒப்பாரி கேட்டு இன்பம்
எட்டுதடா இவ்விசையில் என்றேன் என்னை
ஏறிட்டுப் பார்த்திட்டான் இன்னும் வைக்கோல்
கட்டுடனே வரும்வண்டிக் காரன் கத்தும்
கானத்தைக்" கேள் என்றேன் கறுப்பு வாலை
வெட்டிடணும் எனச் சொன்னான் "வேகம் ஏனோ
விளையாட்டா! அரசியலார் பாடம்" என்றேன்.
கழுதையதன் கத்தலினைக் கானம் என்று
காட்டிடவா சொன்னார்கள் சர்க்கார் என்ற
பொழுதினிலே ஆடையெலாம் பொத்தல்; பிச்சை
பொருள்தேடச் சிறுசட்டி கொண்டோன் கண்டு
கழுதை இதோ பார்! இவனோ பிச்சை காரன்
காங்கிரசார் இந்நாட்டு மன்னன் என்பார்
அழுதிங்குச் சாவோரும் அரசர் என்றால்
அழுகுரலும் இசைஎன்றேன் அதையார் கண்டார்!

—பொன்னிவளவன், பாவநாசம்

திருச்சியிலே கூடுகிறது!

நமது

மாநில மாநாடு

திராவிடம் பெற்றிட திட்டம் வகுத்திட

இனிக்கும் பேச்சும் எண்ணப் புதுமையும்
அங்கே கிடைத்திடும்; அறிஞர் அண்ணா,
இருக்கும் இடத்தில் இருக்காதா இவை?

நமது மேடை

6—11—55ல் சென்னையில்

திரு. வி. க திடல் தன்னில் தோழர்,
டி. எஸ். சண்முகம் தலைமையில், அறிஞர்
அண்ணா அவர்கள் அழகு தமிழில்
பேசுவார்; பலரும் பேசுவர் ஆங்கே!

★

6—11—55 ல் காஞ்சிபுரத்தில்

சிந்தனைச் சிற்பி சி. பி. சிற் றரசு,
காஞ்சி புரத்தில் கண்ணன் டாக்கீசில்
உதய காலை ஒன்பது மணிக்குச்
"ஜோன்ஆஃப் ஆர்க்கும் ஜூலியஸ்
சீசரும்"
எனும்பொருள் பற்றி எடுத்துரைப்
பாரே!

★

7-11-55 திருவெண்காட்டில்:

சிறப்பு மிகுந்த திருவெண் காட்டில்,
மேல வீதியில், மாலை ஐந்தரை
மணிக்கு நமது, மாண்பு மிகுந்த
பொதுச்செய லாளர் இரா. நெடுஞ்
செழியன்,
கேசவன் தலைமையில் பேசிடு வாரே!

★

கி. ஆ. பெ. அவர்கட்குப் பொன்னாடை

குன்று சுமக்கும் கோவைமா நகரில்
வள்ளுவர் படிப்பகம் வைத்து நடாத்துவோர்,
தைத்திங் கள்தனில் தமிழறி வாளர்,
கி. ஆ. பெ விசுவ நாதம் அவர்கட்கு,
பொன்னாடை போர்த்திப் பெருமைசெய்
குவரே

★

எஸ். எஸ். நடராசன்

நல்ல நடிகர்; நாடகப் பேச்சில்,
வல்லவர்; இந்த வாலிபக் கலைஞர்
இப்போது, 'மூன்று பெண்கள்' என்னும்
படத்திலே நடித்து வருகின் றாரே!

ஆசிரியரும், வெளியிடுபவரும்:—சுரதா, 12, படவேட்டம்மன் கோவில் தெரு, சென்னை-12.
19, ஆலத்தூர் சுப்பிரமணிய ஆச்சாரி தெரு, சூளை, சென்னை-7
அச்சிட்டவர்:—D. ரத்தினவேலு, ஸ்ரீ பாரதி பிரஸ்,
[ஆண்டு சந்தா ரு. 4. ஆறு மாதம் ரு. 2.]